## *புனித சுவாமிநாதர் (1170-1221)*

இவருடைய தாய் மிகுந்த பக்தி உள்ளவள். அடிக்கடி கடவுளுடன் பேச இவருக்கு தாய் கற்பித்தாள். இரவில் படுத்திருக்கும் பொழுது எழுந்து முழந்தாட்படியிட்டு செபிப்பார். பின்னர் வெறும் தரையில் படுத்து உறங்குவார். புனித அகுஸ்தீனுடைய சபையில் சேர்ந்து, தன்னையும் அர்ச்சித்து வந்தார். பிரசங்கம் செய்து பிறரையும் அர்ச்சிக்க முயன்றார். ஆயருடன் ஒருமுறை இவர் பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றார். அங்கு ஆல்பிஜன்ஸ் என்னும் பதிதக் கொள்கை பரவி ஏராளமான தீமைகளை விளைவித்து வந்தது. இத்தீமை பரவாமல் தடுக்க ஆயரும் இவரும் உறுதி செய்தனர். பாப்புவின் அனுமதியுடன் பதிதர்களின் மத்தியில் ஆர்வத்துடன் உழைத்தார். பாவிகள் மனந்திரும்ப செபித்தார்; தவம் செய்தார்; பாப்புவின் அனுமதியுடன் பதிதர்களின் மத்தியில் ஆர்வத்துடன் உழைத்தார். பாவிகள் மனந்திரும்ப செபித்தார்; தவம் செய்தார்; தன்னையே தண்டித்தார். எதிர்பார்த்த அளவு பலன் கிடைக்கவில்லை. தேவதாயின் உதவியை நாடினார். அன்னை இவருக்குத் தோன்றி “எனது செபமலையைப் பற்றி எங்கும் பிரசங்கம் செய். தப்பறையான கொள்கைகளை அழிக்க செபமலை சிறந்த கருவி புண்ணியத்தில் வளரவும் அது பேருதவியாக இருக்கும். கடவுளது கோபத்தைத் தணித்து தேவ இரக்கத்தை அது மக்களுக்கு பெற்றுத் தரும். கடவுளது திருச்சபைக்கு அது பெருத்த சிறந்த பாதுகாப்பாய் இருக்கும்” என்றாள். செபமாலை பக்தியினால் அநேகரை, இவர் மனந்திருப்பினார். சிறுவர்களின் பயிற்சிக்காக கன்னியர் சபை ஒன்றையும் மக்களுக்கு போதிக்க ஆண்களுக்கென்று துறவற சபை ஒன்றையும் ஏற்படுத்தினார். 1216-ல் ஒரு சபை உண்டு பண்ணி போப்பின் அனுமதியும் பெற்றார். தமது 51-ஆம் வயதில் இறந்தார்.

**சிந்தனை:**

செபமலையைத் தக்க விதமாக செபித்து, இயேசுவைப் போலவும், மரியாளைப் போலவும் வாழ்வதற்கான பலத்தைப் பெறலாம். நம் சத்துருக்களான உலகம், பசாசு, உடல் இவற்றை முறியடிக்கலாம்.

**செபம்:**

திருச்செபமாலை இராக்கினியே, திருச்சபையையும், உலகத்தையும் காப்பாற்றும்.